

# நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

பதிப்பு வெளியீடு 1856,செப்டம்பர் 2020

# நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

பதிப்பு வெளியீடு 1856,செப்டம்பர் 2020

**பொறுப்புத் துறப்பு:**

இந்தப் பதிப்பு வெளியீட்டில் உள்ள தகவல்கள் பொது வழிக் காட்டுதலுக்கு மட்டுமே. இது சட்டப்படியான ஆலோசனை அல்லது தொழில்முறை சார்ந்த ஆலோசனை என்னும் அளவிலானது அல்ல. சட்ட விதிகளின் வலியுறுத்தல் என்று இதைக் கருதக்கூடாது. பொதுவான வழிக்காட்டுதலை வழங்குவது மட்டுமே இதன் உள்நோக்கம், பொதுமைபடுத்தல்கள் இதில் உள்ளடங்கியிருக்கலாம்.

உங்களுக்கு ஏதேனும் குறிப்பிட்ட சந்தேகமிருந்தால் நீங்கள் தொழில்முறை ஆலோசனையைப் பெற வேண்டும். நடப்புச் செயல்பாட்டில் உள்ள துல்லியமான தகவல்களை வழங்க EPA தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது, ஆனாலும், அத்தகவல்களின் துல்லியம், நடப்புச் செயல்பாடு அல்லது முழுமை குறித்து எந்த உத்தரவாதத்தையும் வழங்கவில்லை.

© விக்டோரியா மாநிலம் (சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையம் விக்டோரியா) 2020.

*நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது* என்ற இந்தப் படைப்பு நூல் Creative Commons Attribution 4.0 licenceஉரிமத்தின்படி உள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையம் விக்டோரியா (EPA விக்டோரியா) இந்த நூலிற்கான ஆசிரியர் என்ற உரிய மதிப்பை வழங்கி அந்த உரிமத்தின் கீழ் நீங்கள் எந்தத் தடையுமின்றி நூலை மீண்டும் பயன்படுத்தலாம். ஏதேனும் மாற்றங்கள் செய்திருந்தால் அதைக் குறிப்பிடவும் மற்றும் உரிமம் குறித்தான மற்ற விதிகளுக்கு உட்படவும். பின்வருபவைக்கு இந்த உரிமம் பொருந்தாது: எல்லா புகைப்படங்கள் மற்றும் படங்களுக்கு; எல்லா பிரான்டிங் (அங்கிகரிக்கப்பட்ட அடையாள முத்திரை), EPA முத்திரை மற்றும் விக்டோரிய அரசாங்க முத்திரை உட்பட; மூன்றாம் தரப்புகள் வழங்கியுள்ள எந்த உள்ளடக்கமும்

அங்கிகரித்து வெளியிடுபவர்கள்; சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு விக்டோரியா

200 விக்டோரியா தெரு, கார்ல்டன், VIC 3053

**W** epa.vic.gov.au | **T** 1300 372 842 (1300 EPA VIC)

Interpreter

உங்களுக்கு மொழிப்பெயர்ப்புச் சேவையாளரின் உதவி தேவைப்பட்டாலோ, இந்த ஆவணம் உங்களுக்கு மொழிபெயர்த்து தரப்பட வேண்டும் என்றாலோ **131 450** என்ற எண்ணில் அழைத்து நீங்கள் வேண்டும் மொழி எது என்பதைக் கூறவும்.

உங்களுக்குக் காது கேட்காது என்றாலோ, செவித்திறன் குறைப்பாடு அல்லது பேச்சுத்திறன் குறைப்பாடு இருந்தாலோ நேஷனல் ரிலே சர்வீஸ் வாயிலாக எங்களைத் தொடர்புக் கொள்ளவும். கூடுதல் தகவலுக்கு, தளத்தைப் பார்வையிடவும்: **www.relayservice.gov.au**

# நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

## உள்ளடக்கங்கள்


மேலோட்டமான பார்வை ..... 3

பொதுவான சுற்றுச்சூழல் கடமை[2] ..... 3

மாசடைந்துள்ள நிலத்தைச் சீரமைப்பதற்கான கடமை[3] ..... 3

நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது எது என்பதை எப்படி முடிவு செய்வது ..... 5

1. முதலில் நீக்கவும் ..... 8

   பாதிப்புக்கு உள்ளாகும் சாத்தியக்கூறை என்னால் நீக்க முடியவில்லை என்றால் நான் என்ன செய்வது? ..... 9

2. பாதிப்புக்கு உள்ளாகும் சாத்தியக்கூறு ..... 9
3. பாதிப்புக்கு உள்ளான அளவீடு (அல்லது பாதிப்பின் விளைவு) ..... 11
4. பாதிப்புக்கு உள்ளாகும் சாத்தியக்கூறுகள் பற்றிய தெளிவு ..... 12
5. கிடைக்கப்பெறுதல் மற்றும் உரிய பொருத்தம் ..... 14
6. செலவினங்கள்: ..... 16

நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியவை காலப்போக்கில் உருவாகும் ..... 18

கிடைக்கப்பெறும் ஆதார வளங்கள் ..... 20


## மேலோட்டமான பார்வை

விக்டோரியாவில், மனிதகுல ஆரோக்கியம், சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கு மாசு மற்றும் கழிவு உருவாக்கத்திலிருந்து ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க இயற்றப்படும் புதிய சட்டங்கள் நடைமுறைக்கு வரும்.

*சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 2017* (சட்டம்)[1] ன் மையத்தில் இருப்பது **general environmental duty** (சுற்றுச்சூழலுக்கான பொது கடமை (GED)).
GED என்பது ஒரு புதிய வகை அணுகுமுறை ஆகும். மாசு மற்றும் கழிவு உருவாக்கத்திலிருந்து ஏற்படும் பாதிப்பின் விளைவுகளை அவை நிகழ்ந்த பின் அவற்றை எதிர்கொள்வதை விட அவை நிகழ்வதற்கு முன் அவற்றைத் தடுப்பதில் கவனம் செலுத்துகிறது.

நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது என்ற அடிப்படையில் பாதிப்புக்கான சாத்தியக்கூறுகளை குறைக்கவோ மறுசெயல் புரியவோ, சட்டத்தின் கீழ் மூன்று கடமைகளை நீங்கள் நிறைவேற்றுவது இன்றியமையாதது.

இந்த வழிகாட்டுதல் நெறிமுறைகள் அவற்றில் உள்ள இரண்டு கடமைகள் குறித்து கவனம் செலுத்துகின்றன, அவை பின்வருமாறு:

### பொதுவான சுற்றுச்சூழல் கடமை[2]

*'மாசு மற்றும் கழிவு உருவாக்கத்தின் விளைவால் மனிதகுல ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எந்த ஒரு நடவடிக்கையிலாவது ஈடுப்பட்டிருக்கும் நபர் பாதிப்பு அளவை குறைக்கும் விதமாக முடிந்த வரை நியாயமாய் நடைமுறைப்படுத்தகூடியதைக் கடைப்பிடிக்க வேண்டும்'* என GED வலியுறுத்துகிறது.

### மாசடைந்துள்ள நிலத்தைச் சீரமைப்பதற்கான கடமை[3]

மாசடைந்துள்ள நிலம் ஏதேனும் உங்கள் கட்டுப்பாட்டில் இருந்தால், *'மாசடைந்த நிலத்தின் விளைவாக மனிதகுல ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக் கூறுகளை குறைக்க நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடிய வழிகாட்டுதல்களை முடிந்த வரை கடைப்பிடிக்கவேண்டும்'*.

## நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

மாசு ஏற்படுத்தும் நிகழ்வு[4] ஒன்றின் காரணமாக ஏற்படும் பாதிப்பிற்கு மறுசெயலாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைக்காக நடைமுறைப்படுத்தக்கூடிய வழிகாட்டுதல்களை முடிந்த வரை கடைப்பிடிக்கும் கடமை. இதற்கு என்று ஒரு தனி வழிக்காட்டுதல் நெறி விரித்துரைக்கப்படும்.

---

[1] *2018 சுற்றுச்சூழல் பாதுகாப்பு திருத்தச்சட்டம்* திருத்தத்தின் படி.

[2] பிரிவு 25, *2017 சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம்* (*2018 சுற்றுச்சூழல் பாதுகாப்பு திருத்தச்சட்டம்* திருத்தத்தின் படி)


[3] பிரிவு 39, *2017 சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம்* (*2018 சுற்றுச்சூழல் பாதுகாப்பு திருத்தச்சட்டம்* திருத்தத்தின் படி)

[4] பிரிவு 31, *2017 சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம்* (*2018 சுற்றுச்சூழல் பாதுகாப்பு திருத்தச்சட்டம்* திருத்தத்தின் படி)

# நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

## நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது எது என்பதை எப்படி முடிவு செய்வது

**நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியதை** நடைமுறைப்படுத்துவதன் அர்த்தம் பாதிப்பிற்கான சாத்தியகூறுகளை மட்டுப்படுத்தவோ குறைக்கவோ நீங்கள் ஏற்ற அளவிலான கட்டுப்பாட்டு முறைகளைச் செயல்படுத்த வேண்டும்.




பாதிப்பிற்கான சாத்தியக் கூறுகளை முளையிலேயே நீக்கும் அல்லது மாற்று வகை செய்யும் **கட்டுப்பாடுகளே** மிகுந்த பயன்தரக்கூடியவை. அதற்கு அடுத்ததாக வருபவை பொறியியல் அல்லது கட்டுமானக் கட்டுப்பாட்டு முறைகள். இறுதியாக பயிற்சி மற்றும் களச் செயல்பாட்டு நடைமுறைகள். பெரும்பாலும் இந்த அனைத்து கட்டுப்பாட்டு முறைகளின் கலவையான கூட்டு தேவைப்படலாம்.




**ஏற்ற அளவிலான** கட்டுப்பாட்டு முறைகள் என்பதன் அர்த்தம் பாதிப்பிற்கான சாத்தியம் அதிகம் இருக்கும்போது அதை எதிர்கொண்டு கையாள்வதற்கான எதிர்பார்ப்பும் அதிகமிருப்பது. இதை நீங்கள் எப்படி நடைமுறைப்படுத்துகிறீர்கள் என்றால் கிடைக்கப்பெறும் பொருத்தமான உரிய கட்டுப்பாட்டு முறைகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு ஏற்றதைச் செயல்படுத்துவதன் வாயிலாக பாதிப்பை நீக்குகிறீர்கள் அல்லது குறைக்கிறீர்கள்.

# நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

ஒரு பொதுவான பாதிப்பு அல்லது பாதிப்பிற்கான சாத்தியக்கூறை நீங்கள் கையாளும்போது நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியதை நீங்கள் கடைப்பிடித்திருக்கிறீர்கள் என்பதை பின்வரும் வகையில் வெளிப்படுத்தலாம்:

- பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை நீக்கவோ எதிர்கொண்டு சமாளிக்கவோ கூடிய நன்கு நிலை பெற்ற பயன்தரக்கூடிய நடைமுறைகளை அல்லது கட்டுப்பாட்டு முறைகளை கடைப்பிடிக்கிறீர்கள்; மற்றும்/அல்லது
- நன்கு நிலை பெற்ற நடைமுறைகள் அல்லது கட்டுப்பாட்டு முறைகள் இல்லாதிருக்கும் பட்சத்தில், பயன்தரக்கூடிய நடைமுறைகளை நீங்கள் அணுகி ஆராய்ந்து அவற்றைக் கடைப்பிடிக்கிறீர்கள் என்பதைக் காண்பிக்கிறீர்கள்.

சுற்றுச்சூழலுக்கான ஒரு பொதுவான பாதிப்பு என்பதற்கான உதாரணம் ஓர் எண்ணெய் கொள்கலனில் இருந்து சிந்தும் எண்ணெய். பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் கிடைக்கப்பெறுகின்ற பொருத்தமான உரிய கட்டுப்பாட்டு முறைகள் ஆகியவற்றின் பின்புலத்தில் பாதிப்பை நீங்கள் நீக்கவோ குறைக்கவோ பின்வருவதை நீங்கள் கருத்தில் கொண்டு ஆலோசிக்கலாம்:




EPA மற்றும் தொழில்துறை ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வழிக்காட்டுதல்கள் பின்வருவனவற்றைக் காண உங்களுக்கு உதவக்கூடும்:

- பொதுவான, பயன்தரத்தக்க நடைமுறைகள்
- பாதிப்புக்கான சாத்தியக்கூறுகளை மதிப்பாய்வு செய்ய பின்பற்ற வேண்டிய படிநிலைகள்
- பாதிப்புக்கான சாத்தியக்கூறுகளை நீக்குவதற்கு அல்லது எதிர்கொண்டு கையாள்வதற்கான கட்டுப்பாட்டு முறைகள்.

சில சூழல்களில், பாதிப்புக்கான சாத்தியக்கூறுகளைக் கட்டுப்படுத்த கிடைக்கப்பெறும் வேறு தெரிவுகளை நீங்கள் மேலும் ஆராய வேண்டியிருக்கலாம். EPA அல்லது தொழில்துறை வழிக்காட்டு நெறிகள் கிடைக்கப்பெறாத நிலை அல்லது பல்வேறு தொகுப்பிலான அணுகுமுறைகள் பயனளிக்கக் கூடியதாக இருக்கும் என்றால், மேலும் ஆலோசனைகளைப் பெறவும்.

பாதிப்புக்கான சாத்தியக்கூறுகளை புரிந்துக்கொள்வதும், அவற்றை எதிர்கொண்டு சமாளிப்பதற்கான சரியான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதும் நீங்கள் எப்போதும் நிறைவேற்ற வேண்டிய கடமை ஆகும்.

## நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

மாசு ஏற்படும் நிகழ்வு அல்லது மாசடையும் நிலம் என ஏதேனும் ஒன்று உங்கள் நடவடிக்கையின் விளைவாக உருவாகிறது என்றால் பாதிப்பிற்கான சாத்தியக்கூறு அல்லது பாதிப்பின் தாக்கம் அல்லது அளவீட்டை நீங்கள் கருத்தில் கொள்வது நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடிய வழிக்காட்டுதல்களை நிர்ணயம் செய்வதில் முக்கியமாகும்.

நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடிய வழிக்காட்டுதல்களை நீங்கள் சிந்தித்து இருக்குறீர்கள் என்பதை வெளிப்படுத்த, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள **ஆறு அம்சங்களைக்** கருத்தில் கொள்ளுங்கள்:

1. **முதலில் நீக்கவும்:** பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை உங்களால் நீக்க முடியுமா?
2. **பாதிப்புக்கு உள்ளாகும் சாத்தியக்கூறு**: பாதிப்பு நிகழும் என்பதற்கான சாத்தியம் என்ன?
3. **பாதிப்புக்கு உள்ளான அளவீடு (பாதிப்பின் விளைவு)**: மனித ஆரோக்கியம் அல்லது சுற்றுச்சூழல் மீதான பாதிப்பு எந்த அளவு கடுமையானதாக இருக்கலாம்?
4. **பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகள் குறித்த உங்களின் தெளிந்த அறிவு:** உங்களது செயல்பாடுகளின் விளைவாக நிகழும் பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகள் பற்றி நீங்கள் அறிந்தது என்ன அல்லது நீங்கள் எதைக் கண்டறிந்து இருக்கிறீர்கள்?
5. **கிடைக்கப்பெறுதல் மற்றும் உரிய பொருத்தம்**: பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை கட்டுப்படுத்த என்ன வகையான தொழில்நுட்பங்கள், செயல்முறைகள் அல்லது உபகரணங்கள் கிடைக்கப்பெறுகின்றன? உங்களது சூழலில் எந்தெந்த கட்டுப்பாட்டு முறைகள் பயன்பாட்டுக்குப் பொருத்தமாக இருக்கின்றன?
6. **செலவினங்கள்:** பாதிப்பிற்கான சாத்தியக்கூறைக் குறைப்பதில் கட்டுப்பாட்டு முறைகள் அதிக பயன்தரத்கூடியதாக இருக்க ஒப்பிடுகையில் செலவினங்கள் மீதான பார்வை எப்படி இருக்க வேண்டும்?

பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை கட்டுப்படுத்த நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடிய வழிக்காட்டுதல்களை நிர்ணயிக்க நீங்கள் பின்வரும் அம்சங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

1. **முதலில் நீக்கவும்**




**கட்டுப்பாட்டு முறைகளின் வரிசை நிலை**

பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை குறைப்பதில் குறைந்த அளவு பயன்தரக்கூடிய கட்டுப்பாட்டு வழிமுறைகளைக் காட்டிலும் அதிக அளவு பயன்தரக்கூடிய கட்டுப்பாட்டு வழிமுறைகளே பெரிதும் விரும்பப்படுகின்றன.

1. பாதிப்பிற்கான சாத்தியக்கூறை நீக்க தீங்கான நச்சுப்பொருளை நீக்கவும் - இதுவே மிக பயன்தரக்கூடிய கட்டுப்பாட்டு வழிமுறையாகும்.
2. தீங்கான நச்சுப்பொருளிற்கான மாற்று அல்லது அதன் மீது புற அளவில் செயல்படுகின்ற பொறியியல் கட்டுப்பாட்டு வழிமுறைகள் பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை குறைக்கும்.
3. இறுதியாக, செயல்படுவதற்கான வழிமுறைகளும் பயிற்சிகளும் மற்றும் தனிநபர் பாதுகாப்பு உபகரணம் (PPE) போன்ற நிர்வாகக் கட்டுப்பாட்டு முறைகளால் மக்கள் ஒழுங்குமுறைகளை மாற்ற வேண்டும்.

பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை எப்படி நீக்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு தொடங்குங்கள். இதற்கு முதல் படியாக பாதிப்பிற்கான சாத்தியக்கூறின் ஆதாரமானதை நீக்க வேண்டும். உங்கள் செயல்பாடுகளை மறுவடிவமைப்பு செய்வதன் மூலம் இதைச் சாதிக்கலாம்.

*எடுத்துக்காட்டு: அகமது ஒரு வாகனப் பழுதுபார்ப்புக் கடையை நிர்வகிக்கிறார். அகமதின் செயல்பாடுகளில் அவர் தினமும் பழுது நீக்கம் செய்யும் கார்களின் எஞ்சின் ஆயிலை மாற்றுவது உள்ளடங்கும். இந்த நடவடிக்கையை மேற்கொள்ள, பழுதுபார்ப்புக் கடையானது புதிய (பயன்படுத்தப்படாத) மற்றும் பழைய (பயன்படுத்திய) ஆயில்களை செயல்பாட்டுத் தளத்திலேயே கொண்டிருக்கிறது. சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் கொள்ளளவு அவரது வழக்கமான வாடிக்கையாளர்களின் வண்டிகளுக்குத் தேவையான அளவாக இருக்கும்.*

*அகமது மற்றும் அவரது ஊழியர்கள் நாள் முழுதும் புது ஆயிலை தொடர்வழக்கமாகப் பயன்படுத்துவார்கள். செயல்பாட்டுத் தளத்தில் ஆயில் சேகரிப்பை* ***நீக்குவது*** *அல்லது சேகரிப்பு அளவைக் குறைப்பது நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது என்று அவர் எண்ணிப் பார்க்கவில்லை. செயல்பாட்டுத் தளத்தில் வேஸ்ட் இஞ்சின் ஆயிலை மட்டுமே அகமது தற்காலிகமாகச் சேமித்து வைக்கிறார். ஒரு போக்குவரத்து நிறுவனத்தை ஈடுபடுத்தி தொழிற்கூடத்தில் உருவாகின்ற வேஸ்ட் ஆயிலை சட்டப்படி உரிய இடத்தில் வைக்க அவர் ஏற்பாடு செய்திருக்கிறார்.*

*செயல்பாட்டுத் தளத்தில் அகமது ஆயிலை சேகரித்து வைக்க வேண்டும் என்பதால், புதிய மற்றும் பழைய ஆயிலை சேகரித்து வைப்பதால் ஏற்படக்கூடிய பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை அவரால்* ***நீக்க*** *முடியாது.* எனவே, எந்தெந்த கட்டுப்பாட்டு முறைகளை செயல்படுத்தினால் பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை குறைக்க முடியும் என்பதை அவர் கருத வேண்டும். அவை முடிந்தவரை நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்.

பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை நீக்குவதற்கான வழிகளை அடையாளம் காண சிறந்த வழிமுறை என்பது செயல்பாடுகள் தொடங்குவதற்கு *முன்பு* பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை நீக்குவதற்கான வாய்ப்புகளை பயன்படுத்த வேண்டும் என்பதை செயல்பாடு வடிவமைப்பின்போது இலக்குகளில் ஒன்றாக நீங்கள் வைத்துக்கொள்ள வேண்டும்.

# நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

**பாதிப்புக்கு உள்ளாகும் சாத்தியக்கூறை என்னால் நீக்க முடியவில்லை என்றால் நான் என்ன செய்வது?**

நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியதான வகையில் பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை நீக்க முடியவில்லை என்றால் அதை எப்படி குறைக்கலாம் என்று நீங்கள் கருத வேண்டும்.

பக்கம் 7 ல் குறிப்பிடப்பட்டுள்ள சூழலின் படி, பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளைக் குறைப்பதற்கு அகமது தனது பழுது நீக்கும் கடையில் ஆயிலை எங்கு எப்படி சேமித்துப் பயன்படுத்த வேண்டும் என்று ஆராய வேண்டும்.

கட்டுப்பாட்டு முறைகளின் வரிசை நிலைகளைக்

கவனத்தில் கொண்டு அதை உங்கள் தளத்தில்

செயல்படுத்தவும். கட்டுப்பாட்டு முறைகளின் வரிசை

நிலைகளைச் செயல்படுத்த, கீழ்க்காணும் அம்சங்களைக்

கவனத்தில் கொள்ளவும்:

### 2. பாதிப்புக்கு உள்ளாகும் சாத்தியக்கூறு




பாதிப்பு நிகழ்வதற்கான சூழல் அல்லது வாய்ப்பு இருப்பதாக கருதவும். பாதிப்பு நிகழ்வதற்கான சூழல் அதிகமாக இருக்கும் பட்சத்தில் நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியவை எவை எல்லாம் இருக்கும் என நிர்ணயிப்பதன் முக்கியத்துவம் அதிகரிக்கின்றது. நிகழ்வதற்கான சாத்தியக்கூறு அல்லது வாய்ப்பு இருப்பதாக கீழ்க்காணப்படும் அம்சங்களை கொண்டு நீங்கள் புரிந்துக்கொள்ளலாம்:

- நச்சுப்பொருட்களை உருவாக்கும் செயல்பாடுகள் எவ்வளவு கால இடைவெளியில் தளத்தில் நிகழ்கின்றன
- குறிப்பிட்ட ஒரு நிகழ்வு தளத்தில் முன்னரே நிகழ்ந்து இருக்கிறதா
- குறிப்பிட்ட இந்த நிகழ்வு மற்ற செயல்பாட்டுத் தளங்களில் பொதுவாக நிகழ்ந்து இருக்கிறதா
- விநியோகிப்பாளர்கள் அல்லது உற்பத்தியாளர்கள் தரும் தகவல்கள்

பாதிப்பு நிகழ்வதற்கான சாத்தியக்கூறு அதிகமிருந்தால், பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை நீக்குவதிலோ குறைப்பதிலோ நீங்கள் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

## நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

*எடுத்துக்காட்டு: அகமது பணி இடத்தை பொறுத்தவரை, புதிய மற்றும் பழைய எஞ்சின் ஆயில்கள் மழைநீர் வடிகால்வாய் அருகே வைக்கப்பட்டிருக்கிறது. அது வாகன நெரிசல்மிக்க பகுதியாகவும் இருக்கிறது. அங்கே சர்வீஸ் செய்யப்படுவதற்காக காத்திருக்கும் கார்கள் நிறுத்தப்பட்டு இருக்கும். ஊழியர்கள் அந்த வாகனங்களை அடிக்கடி நகர்த்திக் கொண்டிருப்பார்கள். மேலும், மழைநீர் வடிகால்வாயை கடந்து இருக்கும் வேஸ்ட் ஆயில் டேங்கிற்கு வேஸ்ட் ஆயிலை சுமந்துக் கொண்டு பணி செய்யும் ஊழியர் ஒருவர் ஒரு நாளில் பல முறை செல்வார்.*

*எஞ்சின் ஆயில் அதிக வாகன நெரிசல் உள்ள பகுதியில் சேகரித்து வைக்கப்பட்டிருப்பதால், ஆயில் சிந்திக் கிடப்பதற்கான* ***வாய்ப்பு*** *அதிகம் என்று அகமதுவிற்குத் தெரியும். காரணம், பழுதான வாகனங்கள் அடிக்கடி நகர்வது ஆயில் சிந்தவோ அல்லது கசிவோ ஏற்படும். ஒரு நாளில் வேஸ்ட் ஆயில் எத்தனை முறை கையாளப்படுகிறது என்பதை அறிந்துள்ளதன் பின்னணியில் வேஸ்ட் ஆயில் கொட்டுவதற்கான சாத்தியக்கூறு அதிகமிருப்பதும் அவருக்குத் தெரியும்.*

*பாதிப்பு நிகழ்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ள செயல்பாட்டுத் தளங்கள் பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளைக் குறைக்க அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் - வாகன நகர்வுகளை கவனத்தில் கொண்டு வாகனங்களிலிருந்து ஆயில் கொட்டுவதற்கான சாத்தியக்கூறுகளை நீக்குவது அல்லது குறைப்பது குறித்து ஆலோசிக்க வேண்டும்.*

### 3. பாதிப்புக்கு உள்ளான அளவீடு (அல்லது பாதிப்பின் விளைவு)




பாதிப்பின் **அளவீட்டை** (அல்லது மனிதர்கள் அல்லது சுற்றுச்சூழல் மீதான பின்விளைவு அல்லது தாக்கத்தை) பரிசீலிக்க வேண்டும் பாதிப்பு நிகழ்வதற்கான சாத்தியக்கூறு அதிகமிருந்தால், பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை நீக்குவதிலோ குறைப்பதிலோ நீங்கள் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

நீர் வடிகால் அல்லது அண்டை அயலார் அருகே உள்ள உணர்வுமயமான சூழல்களில் பாதிப்பின் அளவீடு கூடுதல் முக்கியத்துவத்தைப் பெறுகிறது. என்றாலும், சுற்றுச்சூழலின் மீது தீங்கான தாக்கத்தை ஏற்படுத்தும் பாதிப்பின் அளவீடு அல்லது கால அளவு எந்த அளவு நிகழ்ந்தாலும் அது சட்டத்திற்கு உட்படும். காலப்போக்கில் ஏற்படுகின்ற தாக்கங்களும் ("ஒட்டு மொத்த" தாக்க அளவு) இதில் உள்ளடங்கும். நீங்கள் ஒரு தொழிற்சாலை அமைப்பில் இருந்தாலும் கூட, மனித ஆரோக்கியம் அல்லது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் சாத்தியக்கூறுகள் காணப்படும் அனைத்து படிநிலைகளும் ஆராயப்பட வேண்டும்.

*எடுத்துக்காட்டு: அகமது பணி இடத்தை பொறுத்த வரை எஞ்சின் ஆயில் மழைநீர் வடிகால்வாய் அருகே சேகரித்து வைக்கப்பட்டிருக்கிறது. அவரது ஊழியர்கள் அடிக்கடி நடமாடும் பகுதியாக அது உள்ளது. இது சுற்றுச்சூழல் மற்றும் மனித ஆரோக்கியம் ஆகியவற்றின் மீது பாதிப்பை ஏற்படுத்தும் சாத்தியக்கூறாக விளங்குகிறது.*

*எஞ்சின் ஆயில் மாற்றப்பட வேண்டும் என்று அகமது அறிவார். காரணம் அது எஞ்சின்கள் மற்றும் ட்ரான்ஸ்மிஷன்களிலும் பயன்படுத்தப்படுவதால் பல வகையான நச்சு கலவைகளை அது உள்ளீர்க்கிறது. கனமான உலோகங்கள் மற்றும் ஹைட்ரோகார்பன்கள் இந்த மாசுக் கலவையில் உள்ளடங்கும். வேஸ்ட் எஞ்சின் ஆயில் மற்றும் அதில் உள்ளடங்கியுள்ள மாசு கலவைகள் முறையாக சேகரித்து வைக்கப்படாமல் அது சுற்றுச்சூழலில் கலக்க அனுமதிக்கப்பட்டால், அது மனிதர்கள், தாவரங்கள் மற்றும் மீன்கள் உட்பட, விலங்குகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.*

*வேஸ்ட் ஆயில் மழைநீர் வடிகால்வாயில் கலக்கும் பட்சத்தில் நீர்வழிப்பாதைகள் மற்றும் மீன்களின் வாழ்வு மீது ஏற்படும் பாதிப்பின் **அளவு** (விளைவு) முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும். மேலும் ஆயில் கசிவோ சிந்துவதோ அவரது ஊழியர் அல்லது அவரது பணியிடம் அருகே வாழும் சமூகத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.*

4. பாதிப்புக்கு உள்ளாகும் சாத்தியக்கூறுகள் பற்றிய தெளிவு




உங்களது செயல்பாடுகளால் சுற்றுச்சூழல் மற்றும் மனித ஆரோக்கியம் பாதிப்புக்கு உள்ளாகும் சாத்தியக்கூறுகள் பற்றிய தெளிவை நீங்கள் பெற்றிருக்க வேண்டும் மற்றும் அதை நீங்கள் தேடிப் பெற வேண்டும். அப்பிரச்சினைகளை அணுகுவதற்கான வழிமுறைகளையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

கீழ் காண்பவையின் அடிப்படையில் ஒரு பொறுப்பாளனின் அறிவுத் தெளிவும் செயல்பாடுகளும் மதிப்பாய்வு செய்யப்படும்:

- அவர்கள் *உண்மையில் அறிந்துள்ளது*, மற்றும்
- ஒருவரது சூழலில் பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அவர் *உண்மையில் அறிந்திருக்க வேண்டியது*.

ஒட்டு மொத்தத்தில் இவை அனைத்தும் 'அறிவார்ந்த நிலை'ஆகக் கருதப்படும். இவை பொறுப்பாளரின் கடமைகளை வரையறை செய்ய உதவும். இந்த அறிவார்ந்த நிலையைப் பெற்றிருப்பது என்பது நம்பத்தகுந்த பெயர்பெற்ற ஆதார வளங்களிலிருந்து சேர்த்த தகவல்கள் எனலாம். வணிகம் மற்றும் தொழில்துறை அமைப்புக்கள், சீரமைப்பு மற்றும் அரசாங்க முகமை நிறுவனங்கள் மற்றும் மற்ற தற்சார்பு மற்றும்/அல்லது சர்வதேச அமைப்புகளில் இருந்து தற்போதைய நடப்பு அறிவு பெறப்படலாம்.

பாதிப்பு உள்ளாவதற்கான சாத்தியக்கூறு குறித்து உங்களுக்குக் கூடுதல் அறிவுத் தெளிவு இருக்கும் பட்சத்தில், பாதிப்பு உண்டாவதற்கான அபாயத்தைக் கண்டுணர்ந்து அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கையை உங்களால் மேற்கொள்ள முடியும். அதே போல, உங்களது நிலையில் உள்ள மற்ற பொறுப்பாளர்களிடமிருந்து தெளிந்த அறிவைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பது, உங்கள் கடமை மற்றும் பொறுப்பை நீங்கள் சரிவர நிறைவேற்றாததைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கும்.

பல சூழல்களில், தெளிவான, ஏற்றுக்கொள்ளப்பட்ட பயன்தரத்தக்க கட்டுப்பாட்டு முறை அல்லது தொகுப்பான கட்டுப்பாட்டு முறைகள் நம்பிக்கைக்குரிய வழிகாட்டுதல் நெறிகளில், தர நிர்ணயங்கள் அல்லது தொழில்துறை நடைமுறைகளில் இருந்தால், உங்களது சூழலுக்கு நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடிய வழிமுறைகளின் பிரதிபலிப்பாக அது இருக்கும்.

## நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

*எடுத்துக்காட்டு: பணியிடத்தில் புதிய மற்றும் பழைய எஞ்சின் ஆயிலைச் சேகரித்து வைப்பதன் காரணமாக பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளைக் கையாள கிடைக்கப்பெறும் கட்டுப்பாட்டு முறைகள் பற்றிய தகவல்களைத் தேடிப் பெற வேண்டிய கடமையும் பொறுப்பும் அகமதுவிற்கு இருக்கிறது.*

*தொழில்துறைக் கழிவுகள் அல்லது வேஸ்ட்களில் உள்ள நச்சுத்தன்மைகள் குறித்து தனக்கு கிடைக்கப்பெற்றுள்ள தொழில்துறை வழிக்காட்டுதல்களை அகமது ஆராய்கிறார். ஆயில் போன்ற திரவங்களைப் பாதுகாப்பாக வைத்து கையாளும் முறைகளையும் ஆராய்கிறார். அவர் பயன்படுத்தும் ஆயில்கள் மீதான லேபிள்களைப் படித்து இதைச் செயல்படுத்துகிறார். தொழில்துறை மற்றும் EPA விக்டோரியாவிலிருந்தும் வழிக்காட்டுதல்களைப் பெறுகிறார்.* அந்த வழிக்காட்டுதல்களில் *EPA வின் பதிப்பு நூல்களான [திரவ சேமிப்பு மற்றும் கையாளுதல் வழிகாட்டுதல்கள்](#) (EPA பதிப்பு 1698) ஆகியன உள்ளடங்கி இருக்கின்றன.*

***தெளிவான அறிவை*** *அகமது வளர்த்துக் கொள்ள விரும்புகிறார். அவரது தொழில்துறையில் ஈடுப்பட்டுள்ள மற்றவர்களின் செயல்பாடுகளையும் புரிந்துகொள்கிறார். அவரது தொழில்துறை வல்லுனர்கள் மற்றும் தொழில்துறை சங்கங்கள் ஆகியவையிடம் கலந்துரையாட அகமது நேரம் ஒதுக்குகிறார். மற்றவர்கள் என்ன வகையான கட்டுப்பாட்டு வழிமுறைகளை அமைத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து அவை தனக்கும் கிடைக்கப்பெற்று அமைய முயற்சிக்கிறார். ஒட்டு மொத்தமான இந்த ஆதாரவளங்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தின் அறிவார்ந்த நிலையை சுட்டிக்காட்டுவதாக இருக்கும்.*

# நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

## 5. கிடைக்கப்பெறுதல் மற்றும் உரிய பொருத்தம்




பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை நீக்குவதற்கு அல்லது குறைப்பற்கு எந்தெந்த கட்டுப்பாட்டு முறைகள் **கிடைக்கப்பெறுகின்றன** மற்றும் அவை எந்த அளவு **ஏற்றதாக** இருக்கும் என்பதை நீங்கள் ஆராய வேண்டும். கட்டுப்பாட்டு உபகாரணத்தின் செயல்பாட்டு அம்சங்களை மட்டும் கவனித்து அதை வாங்குவது என்று மட்டும் அர்த்தம் கொள்ளக்கூடாது; செயல்பாட்டு முறையை மாற்றி அமைக்க வேண்டிய தேவையும் இதில் உள்ளடங்கும்.

ஒரு நச்சுப் பொருளை நீக்குவதற்கான அல்லது குறைப்பதற்கான வழி, பின்வரும் சூழல்களில் பொதுவாக *கிடைக்கப்பெறும்*:

- கட்டுப்பாட்டு வழிமுறை அமைப்பை வாங்குவது அல்லது தயாரிப்பது சாத்தியமான ஒன்றாக இருக்கும் பட்சத்தில்; அல்லது
- அது செயல்பாட்டு முறையாக இருக்கும் பட்சத்தில், அதை உங்கள் பணிச்சூழலில் நடைமுறைப்படுத்துவது சாத்தியமானது.

ஒரு நச்சுப் பொருளை நீக்குவது அல்லது குறைப்பதற்கான வழி, பின்வரும் சூழல்களில் பொதுவாக *பொருத்தமாக* இருக்கும்:

- ஒரு நச்சுப் பொருள் அல்லது பாதிப்பிற்கான சாத்தியக்கூறிலிருந்து பாதிப்பு நிகழ்வதை அல்லது பாதிப்பின் அளவை நீக்குவது அல்லது குறைப்பது பயனுள்ளதாக இருப்பது
- அனைத்து சூழல்களையும் கருத்தில் கொண்டு புதிய மற்றும் அதிக பாதிப்பிற்கான சாத்தியக் கூறுகளை அறிமுகப்படுத்துவதில்லை
- நச்சுப்பொருள் அல்லது பாதிப்பிற்கான சாத்தியக்கூறு நிலைப்பெற்று இருக்கும் பட்சத்தில் சூழலுக்கு ஏற்ற நடைமுறைப்படுத்தக்கூடிய கட்டுப்பாட்டு முறையாக இருப்பது.




இந்த அம்சங்களை நீங்கள் கருதும்போது கட்டுப்பாட்டு முறைகளின் வரிசை நிலையையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளைக் கட்டுப்படுத்த நவீன தொழில்நுட்பம் அல்லது உபகரணங்கள் கிடைக்கப்பெறாதிருக்கும் பட்சத்தில் (அந்தச் சூழலில் உங்களால் பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை **நீக்க** முடியாது). எனவே செயல்பாடுகளை வேறு (பாதுகாப்பான) பகுதிக்கு மாற்ற நீங்கள் ஆலோசிக்கலாம் (**பொறியியல் கட்டுப்பாடுகளை** அமைக்க கூடிய) அல்லது பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை குறைக்கும் (**நிர்வாகக் கட்டுப்பாட்டு முறைகள்**) சிறந்த வழிமுறைகளில் செயல்பட உங்கள் ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பது.

## நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

*எடுத்துக்காட்டு: தனது செயல்பாடுகள் குறித்து தனது விநியோகிப்பாளர்களுடன் கலந்து ஆலோசித்து கிடைக்கப்பெறுகின்ற கட்டுப்பாட்டு முறைகளை அகமது அடையாளம் காண முடியும். பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் விற்பனைக்குக் கிடைக்கப்பெறும் வாய்ப்புக்களையும் அவர் ஆராயலாம் அல்லது நடப்புத் தொழில்துறை மற்றும் EPA வழிக்காட்டுதல்களுக்கு உட்படுகின்ற புதிய செயல்பாடுகளை அவர் கடைப்பிடிக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒழுகுதல் அல்லது கசிவுகளை தடுக்கும் பல்வேறு தீர்வுகள் தற்போது கிடைக்கப்பெறுகின்றன. அவற்றைப் பயன்படுத்த அகமது ஆலோசிக்கலாம்.*

*கட்டுப்பாட்டு முறைகளின் செயல்பாட்டை அகமது புரிந்துக் கொண்டு, தனது சூழலுக்கு அக்கட்டுப்பாட்டு முறைகள் பொருந்துமா என்று அகமது ஆலோசிக்கலாம். பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை எதிர்கொண்டு கையாள என்னென்ன பயன்தரத்தக்க தெரிவுகள் இருக்கின்றன, செயல்பாட்டு முறையில் அல்லது தளத்தில் எத்தகைய மாற்றங்களை உட்புகுத்த வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். அவரது தளத்தில் உள்ள நச்சுப்பொருட்கள் காரணமாக சில வகையான தெரிவுகள் பொருத்தமாக இல்லாமல் போகலாம். எடுத்துக்காட்டாக, செயல்பாட்டுத் தளத்தில் ஒழுகியுள்ள எஞ்சின் ஆயிலின் தீப்பிடித்துக் கொள்ளக்கூடிய தன்மையின் காரணமாக கிடைக்கப் பெறும் சில வகையான ஸ்பில் கிட்டுகள் பொருத்தமாக இல்லாமல் போகலாம். ஆயிலுடன் ஒத்துப்போகக்கூடிய அளவில் எந்த வகையான கிட்டுகள் இருக்கும் என்று அகமது கண்டறிய வேண்டும்.*

*வாகன மோதல்களுக்கான சாத்தியக்கூறுகளை குறைக்க அகமது குறிப்புப் பலகைகளை வைக்கலாம். என்றாலும், இந்தக் குறிப்புப் பலகைகள் ஆங்கிலத்தில் மட்டுமே இருந்தால் அவரது குழுவில் உள்ள ஆங்கிலம் தெரியாத ஊழியர்களுக்கு அது பொருந்தாமல் போகலாம். இத்தகைய சூழல்களில் குறிப்புப் பலகைகளில் குறியீடுகள், நிறங்கள் மற்றும் வண்ணங்களை அகமது பயன்படுத்தலாம். எனவே வேஸ்ட் ஆயில் டேங்க் வைக்கப்பட்டிருக்கும் பகுதியில் வாகனங்களை நகர்த்தும்போது மோதலுக்கான சாத்தியக்கூறுகளை தவிர்க்கும்.*

# நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

**6. செலவினங்கள்:**




பாதிப்பைக் குறைக்கும் குறிப்பிட்ட தீர்வின் செலவினத்தை அது எந்த அளவை பாதிப்பை குறைக்கின்றதோடு ஒப்பிட வேண்டும்.

முக்கியமாக, மிகப் பயன்தரக்கூடிய தீர்வு எப்போதும் விலை கூடுதலாக இருக்கும் என்று சொல்ல முடியாது. அதே போல, பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை கட்டுப்படுத்த விலை மலிவான தீர்வு பயன்தரக்கூடியது அல்ல என்று சொல்ல முடியாது.

உதாரணமாக, பொறியியல் கட்டுப்பாட்டு முறைகளை நிர்மாணிப்பது கூடுதல் செலவை ஏற்படுத்தலாம். ஆனால் பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகள் குறிப்பிடத்தகுந்த அளவு குறையும், குறிப்பாக செயல்பாட்டுப் பயிற்சிமுறை போன்ற நிர்வாகக் கட்டுப்பாட்டு முறைகள் பயன்தராத வேளைகளில். மேலும், காலப்போக்கில், *திறன்மிக்க* நிர்வாகக் கட்டுப்பாட்டு முறைகளை (தொடர் பயிற்சி மற்றும் சோதனை ஆய்வுகள்) பராமரிப்பதானது, புதுப்பித்தல் தேவைப்படாத கட்டுப்பாட்டு முறைகளை விட செலவினம் கூட வாய்ப்பு அதிகம்.

பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை குறைப்பதற்கான ஆதார வளங்கள் குறித்து உங்களுக்கு அதிகம் தெரிந்திருப்பது மட்டுமே எந்த வகையிலும் பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளைக் குறைக்காது என்று அறிந்து *நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடிய* தரநிர்ணயங்களைக் கடைப்பிடிப்பது உங்களின் பொறுப்பை நீங்கள் உணர்ந்ததாக வெளிக்காட்டும். இதற்கு நீங்கள் ஆலோசிக்க வேண்டியது:

- கட்டுப்பாட்டு முறை(களை) நடைமுறைப்படுத்துவதற்கான முதலீட்டுத் தொகை பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளின் அளவோடு ஒப்பிடுகையில் ஏற்புடையதாக இல்லை, எனவே, கட்டுப்பாட்டு முறை(களை) நடைமுறைப்படுத்துவது *நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியதாகக்* கருதப்படாது; அல்லது
- மிக விலை அதிகமான கட்டுப்பாட்டு முறை அல்லது ஆதார வளங்களைத் தீவிரமாக ஈடுப்படுத்தும் கட்டுப்பாட்டு முறைப் பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகள் பெருமளவு குறைக்க வழிவகுக்கும் என்று கூற முடியாது.

இத்தகைய சூழல்களைக் கருத்தில் கொண்டு பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளைக் குறைக்க நீங்கள் செயல்படத் தேவையில்லை என்று ஆகாது. ஆனால், ஏற்கெனவே செயல்பாட்டில் நம்பிக்கைக்கு உரிய முறை உள்ளதா என்பதைக் கண்டறிய உதவும் அல்லது நீங்கள் பரிந்துரைக்கும் வேறொரு கட்டுப்பாட்டு முறை பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளை திறம்பட நீக்குமா அல்லது குறைக்குமா என்பதைக் கண்டறிய உதவும்.

பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளைக் கட்டுப்படுத்துவதில் ஒரே கட்டுப்பாட்டு வழிமுறையோடு ஒப்பிடுகையில் பெரும்பாலும் ஒரு கலவையான கட்டுப்பாட்டு முறைகளை பயன்படுத்துவது பொதுவாக நிதியியல் அடிப்படையில் ஏற்புடையதாக இருக்கும். இரு செயல்பாடுகளிலும் பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகளைக் கட்டுப்படுத்துவது ஒரே அளவாக இருக்கும் என்ற பின்னணியோடு.


## நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

*எடுத்துக்காட்டு: புதிய மற்றும் கழிவு இயந்திர எண்ணெய்களை தளத்தில் சேமிப்பதன் மூலம் ஏற்படும் தீங்கு விளைவிக்கும் பாதிப்புகளைக் கையாள தனக்குக் கிடைக்கக்கூடிய அனைத்து கட்டுப்பாடுகளையும் அகமது அடையாளம் கண்டுள்ளார்.*

*பாதிப்பைக் கட்டுப்படுத்துவதில் பயனுள்ள ஒரு சில கட்டுப்பாடுகளைச் செயல்படுத்த அதன் நன்மை தீமைகளை அகமது தீர்மானித்திருக்கிறார். அகமது தனக்குக் கிடைக்கும் பல கட்டுப்பாடுகள் எளிமையானவை,* ***செலவு*** *குறைந்தவை மற்றும் செயல்படுத்த எளிதானவை என்பதை அங்கீகரிக்கிறார். இருப்பினும், அகமது பெறக்கூடிய சில கட்டுப்பாடுகள் விலை உயர்ந்தவை மற்றும் செயல்படுத்துவதற்கு சில வளங்கள் தீவிரமானவை. அந்தக் கட்டுப்பாடுகளை செயல்படுத்துவதற்கான செலவானது பாதிப்புகளை மேலும் குறைக்க அவர்கள் பெறக்கூடிய சாத்தியமான நன்மைக்கு விகிதாசாரமா என்று அகமது சிந்திப்பார்.*

# நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

*அகமது இப்போது பின்வருவற்றைக் கருத்தில் கொள்கிறார்:*




1. *என்னால் பாதிப்பை நீக்க முடியுமா (நீக்குதல்)?*
2. *பாதிப்பு நிகழும் என்பதற்கான சாத்தியம் என்ன (சாத்தியக் கூறு)?*
3. *மனித ஆரோக்கியம் அல்லது சுற்றுச்சூழல் மீதான பாதிப்பு எந்த அளவு கடுமையானதாக இருக்கும் (அளவீடு அல்லது பாதிப்பின் விளைவு)?*
4. *எனது செயல்பாடுகளின் விளைவாக நிகழும் பாதிப்பிற்கான சாத்தியக்கூறுகள் பற்றி நான் அறிந்தது என்ன அல்லது நான் எதை கண்டறிய முடியும் (அறிவு)?*
5. *எந்த வகையான தொழில்நுட்பம், செயல்முறைகள் அல்லது உபகரணங்கள் கிடைக்கின்றன மற்றும் ஆபத்தை (கிடைக்கப்பெறுதல் மற்றும் உரிய பொருத்தம்) கட்டுப்படுத்த ஏற்றதாக இருக்கும்?*
6. *கட்டுப்பாட்டு விருப்பத் தெரிவுகளின் விலை தவிர்க்கப்படக்கூடிய பாதிப்புடன் எவ்வாறு ஒப்பிடப்படுகிறது?*

தீங்கு விளைவிக்கும் பாதிப்பை அகற்ற அல்லது குறைக்க அவர் செயல்படுத்தும் கட்டுப்பாடுகள் **நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது** என்பது நடைமுறையில் உள்ளன என்பதை நிரூபிக்க அகமது இந்த சிந்தனையைப் பயன்படுத்தலாம்.

## நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியவை காலப்போக்கில் உருவாகும்

மனித ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகள் குறித்த அனுபவ அறிவு நிலை காலப்போக்கில் மேம்படுகிறது. பாதிப்புகள் குறித்த புதிய அனுபவம் எழுகிறதோடு புதிய மற்றும் மிகவும் ஏற்புடைய தொழில்நுட்பம் மற்றும் நுட்பங்கள் மூலம் பாதிப்புகளை சிறப்பாகக் கையாள்வதற்கான புதிய வாய்ப்புகள் எழுகின்றன. அனைத்து தொழில்முறைகளுக்கும் செயல்பாடுகளுக்கும் அனுபவத்தன்மை மாறுபடுகிறது அல்லது மேம்படுகிறது.

கையாள்வதற்கான புதிய தேர்வுகள் கிடைக்கும் வரையிலும், பணி மேற்கொள்பவர்கள் தங்கள் செயல்பாடுகளிலிருந்து எழும் பாதிப்புகள் மற்றும் நடைமுறையில் இருக்கும் பாதிப்புகளை கையாள்வதற்கான அவர்களின் அணுகுமுறையின் செயல்திறனை மதிப்பாய்வு செய்ய வேண்டும்.

உங்கள் செயல்பாடுகளின் சாத்தியக்கூறுகள் மற்றும் விளைவுகள் பற்றிய உங்கள் புரிதலையும், மனித ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் பாதிப்பைக் குறைக்க நீங்கள் கையாளும்

## நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

கட்டுப்பாடுகளையும் நீங்கள் தொடர்ந்து மதிப்பாய்வு செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம், நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது குறித்த உங்களின் தற்போதைய புரிதலை நீங்கள் தொடர்ந்து உறுதிசெய்ய முடியும்.

# நியாயமாய் நடைமுறைப்படுத்தக்கூடியது

## கிடைக்கப்பெறும் ஆதார வளங்கள்

புதிய சட்டங்களுக்கு ஏற்ப உங்கள் வணிகத்தை உருவாக்குவது தொடர்பான கூடுதல் தகவலுக்கு, உங்களுக்கு உதவ பின்வரும் வளங்களைப் பயன்படுத்தலாம்:

- *தொழிற்துறை வழிகாட்டி: பொது சுற்றுச்சூழல் கடமைக்கு இணங்க உங்களுக்கு உதவுதல்*
(EPA பதிப்பு வெளியீடு 1741)
- சுற்றுச்சூழல் இடர் மேலாண்மை
- *ஆபத்தை மதிப்பிடுதல் மற்றும் கட்டுப்படுத்துதல்: வணிகத்திற்கான வழிகாட்டி*
(EPA பதிப்பு வெளியீடு 1695)
- epa.vic.gov.au/for-business

**அங்கீகார அறிக்கை**

விக்டோரியாவின் முதன்மை நாட்டு மக்களையும், உலகின் பழமையான வாழ்க்கை கலாச்சாரத்தைக் கடைப்பிடிப்பதில்
அவர்களின் தற்போதைய பலத்தையும் EPA ஒப்புக்கொள்கிறது. நாங்கள் வாழ்கின்ற மற்றும் பணி செய்கின்ற நிலம் மற்றும் நீரின் பாரம்பரிய உரிமையாளர்களை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் அவர்களின் மூப்பர்களுக்கு எங்கள் மரியாதையை செலுத்துகிறோம்.

நாங்கள் கீழ்வருவற்றை ஒப்புக்கொள்கிறோம்:

- நிலமும் நீரும் தொல்குடி மக்களுக்கு ஆன்மீக, கலாச்சார மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது.
- விக்டோரியாவில் உள்ள அனைத்து இடங்களும் தொல்குடி விக்டோரியா மக்களின் பாரம்பரிய நாட்டில் உள்ளன.
- தொல்குடி மக்களின் ஆர்வமும், தேவைகளும் இலட்சியங்களும் EPA இன் முக்கிய வணிகத்திற்கு ஒருங்கிணைந்தவையாகும்.

ஆயிரமாண்டுகால சுற்றுச்சூழல் பராமரிப்பை அங்கீகரித்து மதிப்பதில், விக்டோரியாவின் தொல்குடி மக்களும் அவர்களின் கலாச்சாரமும் மாசு மற்றும் கழிவுகளின் தீங்கு விளைவிக்கும் விளைவுகளிலிருந்து மனித ஆரோக்கியத்தையும் சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதற்கான EPA இன் ஒழுங்குமுறை அனுப்புதலுடன் ஒருங்கிணைந்தவையாகும். எங்கள் ஒழுங்குமுறைக்கான அணுகுமுறையின் ஒரு பகுதியாக, தொல்குடி மக்களின் முன்னோக்குகள் மற்றும் மதிப்புகளை உள்ளடக்கி, கலாச்சார ரீதியாக பாதுகாப்பான மற்றும் உள்ளடக்கிய பணிச்சூழலைக் கட்டியெழுப்ப நாங்கள் முற்படுகிறோம்.

அனைத்து விக்டோரிய நாட்டவர்களும் தொல்குடி மக்களின் கலாச்சாரப் பாரம்பரியத்தை ஏற்றுக்கொள்ளவும், மதிக்கவும், பாதுகாக்கவும் அவர்கள் வழிநடத்தும் வழிகளை பின்பற்றக் கருத்தில் கொள்ளுமாறு EPA ஊக்குவிக்கிறது.